# தமிழ்மொழியும் இலக்கியமும்

## தரம் 06

## தவணை 01

## அலகு 03

## ஏமாந்தநாய்





MRS.KUNESWERY RAGUNATHAN
IN SERVICE ADVISOR
ZONAL EDUCATION OFFICE
JAFFNA

- பாட விடயம் : ஏமாந்த நாய்
- தேர்ச்சி : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்

# ஏமாந்த நாய்

ஓர் ஊரில் ஒரு உணவகம் இருந்தது. அங்கே சமையல்காரன் வடை சுட்டுக்கொண்டிருந்தான்.

காகம் ஒன்று ஜன்னலில் காத்திருந்தது.

சமையல்காரன் விறகு எடுப்பதற்குக் கீழே குனிந்ததும் காகம் வடையைக் கொத்திக் கொண்டு பறந்தது.

இதைக் கண்ட முதலாளி சமையல்காரனை ஏசினார்

இதே நேரம் ஒருபையன் திருடியிருந்தால் பிடித்து அடித்திருப்பார்.

ஆனால் காகத்தை ஒன்றும் செய்யமுடியவில்லை



- வடையுடன் பறந்து சென்ற காகம் தன் இனத்தவரைக் கூப்பிட்டு விருந்து போட எண்ணியது.
- அந்த வேளை நாய் ஒன்று அந்த வழியே வந்தது.
- மரத்தை அண்ணார்ந்து பார்த்தது.
- வாயில் நீர் சொட்டவே காகத்தை ஏமாற்றி வடை பறிக்க எண்ணம் கொண்டது.
- எண்ணத்தின் வெளிப்பாடாய் “காக்கா நீ அழகான காக்கா குயில் குஞ்சைக் கூட அடைகாத்துக் குரல் சொல்லிக் கொடுப்பாயாம். ஒரு பாட்டுப்பாடு” என நயமாகக் கேட்டது.
- உடனே காக்கா வடையைத் தன் கால் நகங்களிற்கிடையே வைத்துப் பிடித்துக் கொண்டு “என் பாட்டி ஒருத்தி நரியிடம் ஏமாந்த கதையை நான் அறிவேன்” அதுபோல எங்களைத் தொடர்ந்தும் ஏமாற்றலாம் என்று எண்ணிவிடாதீர்கள்.







- நான் பாடத்தான் போகின்றேன். ஆனால் உனக்காக அல்ல.
- எம் இனத்தவர்கள் எல்லோரையும் அழைத்துப் பகிர்ந்து உண்பதற்காக
- உன்னைப் போல உன் இனத்தவரையே வெறுக்கின்ற சாதி நாங்கள் அல்ல
- நீயோ, இந்த வடை உனக்கு கிடைத்திருந்தால் நீயே சாப்பிடுவாய்.
- இன்னொரு நாய் வந்தால் இந்த வடையைவிட்டுவிட்டு உன் சகோதரனையே கடிப்பாய்.
- உன்னைப்பார்க்க வெட்கமாயிருக்கிறது என்று சொல்லிக் கொண்டு, நாயின் மேல் எச்சம் போட்டது
- காகம் தன் இனத்தைக் கூப்பிடவே ஏமாந்த நாய் தலை குனிந்த படி ஓடியது.

## தரம் 6 தமிழ்மொழியும் இலக்கியமும் ஏமாந்த நாய்

### கதையின் ஊடான படிப்பினைகள்

- **நாய் கற்றுத் தருபவை**
  - பிறர் பொருளுக்கு ஆசைப்படக்கூடாது
  - ஏமாற்றி வாழ நினைக்கக் கூடாது
  - எம் இனத்துடன் சண்டைபோடக் கூடாது.
- **காகம் கற்றுத் தருபவை**
  - பொறுமையுடன் காத்திருந்து வெற்றி பெற வேண்டும்.
  - பகிர்ந்து உண்ண வேண்டும்
  - அதீத புகழ்ச்சிக்குப் பலியாகக் கூடாது.
  - எம்மை ஏமாற்ற நினைப்பவர்களைத் தலை குனியச் செய்யவேண்டும்.
- **சமையற்காரன் கற்றுத்தருபவை**
  - நாம் செய்யும் வேலையில் பொறுப்பும் கவனமும் தேவை
- **முதலாளியிடம் இருந்து கற்பவை**
- தொழில் மீது அக்கறை

## செயற்பாடு

### 01. பொருத்தமான விடையின் கீழ் கீறிடுவோம்

1) காகம் வடையைத் தூக்கிச் சென்று அமர்ந்த மரம்

1 விளாமரம்

2. அரசமரம்

3. வேப்பமரம்

4. மாமரம்

2. வடையைப் பறிக்கத் திட்டம் போட்ட மிருகம்

1. நாய்
2. ஓநாய்
3. நரி
4. காகம்

3. ஒரு பாட்டுப்பாடுவாயா? இங்கு பாட்டு என்பதன் ஒத்தசொல்

1. இசை
2. வசை
3. உரை
4. இராகம்

4. “ஹோட்டல்” முதலாளி வந்தார். முதலாளி என்பதன் எதிர்ப்பதம்

1. விவசாயி
2. தொழிலாளி
3. படிப்பாளி
4. வேலையாளி

5. நீ உன் சகோதரனையே கடிப்பாய். சகோதரன் என்பதன் எதிர்பாற்சொல்

1. சகா
2. சகோதரி
3. பத்தினி
4. சகோதரர்

6. என் பாட்டி ஒருத்தி நரியிடம் ஏமாந்தாள். பாட்டி என்பதன் எதிர்பாற்சொல்

1. பாட்டன்
2. பாட்டா
3. தாத்தா
4. ஐயா

7. நாய் ஒன்று இங்கே ஓடி வந்தது. இங்கு வந்துள்ள பெயர்ச்சொல்

1. ஓடி
2. நாய்
3. வந்தது
4. இங்கே

8. நாய் தலை குனிந்து ஓடியது. இங்கு வந்துள்ள சினைப் பெயர்ச்சொல்

1. நாய்
2. ஓடி
3. தலை
4. குனிந்து

9. ஒரு பாட்டுப் பாடுவாயா? இது

1. ஏவல் வாக்கியம்
2. கூற்று வாக்கியம்
3. கலப்பு வாக்கியம்
4. வினா வாக்கியம்

10. காகம் வடையுடன் பறந்து சென்றது.இங்கு வந்துள்ள வினைச்சொல்

1. காகம்
2. பறந்து
3. சென்றது
4. வடை

## 02.ஒத்தசொல்லை இனங்கண்டு தொடர்புபடுத்துவோம்

நீர் → அப்பு

உணவு → ஆகாரம்

ஆவல் → விருப்பம்

நாய் → ஞமலி

தலை → சென்னி

03. பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( ✗ ) எனவும் அடையாளம் போடுவோம்.

1. காகம் குயிலின் முட்டையை அடைகாக்கும் ( ✓ )
2. ஹோட்டலில் பாட்டி வடை சுட்டார் ( ✗ )
3. காகம் கூடியுண்ணும் பண்பு கொண்டது ( ✓ )
4. நாய் விருந்தோம்பல் பண்பில் சிறந்தது ( ✗ )
5. நாய் காகத்திடம் ஏமாந்தது ( ✓ )

## 04. பொருத்தமான விடையைத் தெரிவு செய்து இடைவெளியை நிரப்புவோம்

(குயில், தலை, நீர், காகம், வடை)

1. நாயின் நாவில் இருந்து ……நீர்…………………………..சொட்டியது
2. சமையல்காரன் ……………வடை……………..சுட்டுக்கொண்டிருந்தான்
3. ஏமாந்த நாய்……………தலை………………….குனிந்தபடி ஓடியது
4. காகத்தின் கூட்டில் ………குயில்……………..முட்டை இடும்.
5. நாயின் மேல் ………காகம்…………………..எச்சம் போட்டது

## 05. சுருக்கமான விடை எழுதுவோம்

1. ஏமாந்த நாய் என்ற கதையை எழுதியவர் யார்?

   செ.கணேசலிங்கன்

2.”என் பாட்டி ஒருத்தி நரியிடம் ஏமாந்த கதையை நானும் கேட்டிருக்கிறேன்”
இக்கூற்றினைக் கூறியது யார்?

காகம்

3. காகத்தின் மலம் எது?

எச்சம்

4. காகத்தின் கூட்டிற்குள் முட்டையிடும் பறவை எது?

குயில்

5. சமையற்காரனை ஏசியவர் யார்?

கடை முதலாளி

தமிழ் எழுத்து

247

உயிர் எழுத்து

12

குறில்

05

அ,இ,உ,எ,ஒ

நெடில்

07

ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ

மெய் எழுத்து

18

வல்லினம் க்,ச்,ட்,த்,ப்,ற்

மெல்லினம் ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்

இடையினம் ய்,ர்,ல்,வ்,ள்,ழ்

உயிர்மெய் எழுத்து

216

ஆய்தம்

01

செயற்பாடு

01. மிகப்பொருத்தமான விடையின் கீழ் கீறிடுவோம்

1. தமிழ்மொழியில் உள்ள எழுத்துகள்
    1. 216
    2. 30
    3. 247
    4. 12

2. உயிர் எழுத்துகளின் எண்ணிக்கை

1. 12
2. 20
3. 30
4. 216

3.முப்புள்ளி என்று அழைக்கப்படும் எழுத்து

1. ஆய்தம்
2. வல்லினம்
3. உயிர்எழுத்து
4. மெல்லினம்

4. தனித்து இயங்கும் ஆற்றல் கொண்ட எழுத்து

1. உயிர்மெய் எழுத்து
2. ஆய்தம்
3. மெய்எழுத்து
4. உயிர் எழுத்து

5. மொழிக்கு முதல் வரும் எழுத்துகள்

1. 20
2. 12
3. 30
4. 12

பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( ✗ ) எனவும் அடையாளம் போடுவோம்.

1. ஒலியின் வரிவடிவம் எழுத்து ஆகும் ( ✓ )
2. முதலெழுத்துகள் 18 ஆகும் ( ✗ )
3. தமிழ் எழுத்துகள் 247 ஆகும் ( ✓ )
4. உயிர் எழுத்துகள் ஓசை அடிப்படையில் இரண்டு வகைப்படும் ( ✓ )
5. உயிர்மெய் எழுத்துகள் 30 ஆகும் ( ✗ )

## பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புவோம்

( ஆய்தம், இடையினம், எழுத்து, முப்பது, மூன்று)

1. ஒலியின் வரிவடிவம் ………எழுத்து………..ஆகும்
2. முதல் எழுத்து………முப்பது………..ஆகும்
3. மெய் எழுத்து………மூன்று………..வகைப்படும்
4. ..இடையினம்…..மிடற்று ஒலி ஆகும்.
5. ……ஆய்தம்…..முப்புள்ளி என அழைக்கப்படுகின்றது.

## தொடர்புபடுத்துவோம்

| | |
|---|---|
| க் + உ | லா |
| ப் + ஒ | தீ |
| ல் + ஆ | நோ |
| ம் + ஊ | கு |
| வ் + எ | பொ |
| த் + ஈ | வெ |
| ந் + ஓ | மூ |

## சுருக்கமான விடை எழுதுவோம்

1. உயிர் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?

2 வகைப்படும்

குறில் எழுத்து, நெடில் எழுத்து

2. உயிர்க் குறில் எழுத்துகளைக் தருக?

- ஆ, இ,உ,எ,ஒ

03. உயிர் நெடில் எழுத்துகளைத் தருக?

ஆ, ஈ, ஊ,ஏ,ஐ,ஓ,ஔ

4. மெய் எழுத்துகள் எத்தனை வகைப்படும்?

3 வகைப்படும்

5. வல்லின எழுத்துகளைத் தருக?

க்,ச்,ட்,த்,ப்,ற்

06. மெல்லின எழுத்துகளைத் தருக?

ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்

07. இடையின எழுத்துகளைத் தருக?

ய்,ர்,ல்,வ்,ழ்,ள்

08. மொழிக்கு முதல் வரும் எழுத்துகள்?

உயிர் எழுத்து

மெய் எழுத்து

09. உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் இணைந்து உருவாகும் எழுத்து எது?

உயிர்மெய் எழுத்து

10. உயிர் மெய் எழுத்துகள் எத்தனை?

216

கற்க கசடற

# நன்றி